**அ.வ.எண். 93/2024 வா.சா.1–உமாமகேஸ்வரி 06.02.2025**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் அப்பா என்ன பரிகாரம் கேட்டு, நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் கிரய ஆவணத்தை பதிவு செய்வதற்காக தாக்கல் செய்தார். வழக்கு ஏ அட்டவணை சொத்து சம்மந்தமாக அந்த மனு தாக்கல் செய்தார். என்னிடம் காட்டப்படுவது அந்த நீதிப்பேராணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இணையவழி பதிவிறக்க நகல் என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது.

எனக்கு 2003ம் வருடத்தில் திருமணம் நடந்தது. திண்டுக்கல் மாவட்டம், குளத்தூரில் உள்ள என் அத்தை மகனுக்கு என்னை திருமணம் செய்து வைத்தனர். திருமணமான முதல் நான் என் கணவர் வீட்டில்தான் வசித்து வந்தேன். என் அப்பாவுடன் பிறந்தவர்கள், என் அப்பாவை சேர்த்து ஆறு சகோதரர்கள், மூன்று சகோதரிகள். வா.சா.ஆ.2 ஆவணத்தை என் அப்பாவின் சகோதரர்களும், அவர்களுடைய வாரிசுகளும் சேர்ந்து ஆறுமுகம், த/பெ. ராமசாமி கோனார் என்பவருக்கு விற்பனை செய்தனர். மேற்படி ஆறுமுகம் என் மாமனார்.

05.06.2003 தேதியிட்ட வா.சா.ஆ.3 ஆவணத்தை என் அப்பாவும், என் சகோதரரும் சேர்ந்து கிருஷ்ணசாமி மற்றும் பழனிச்சாமியின் வாரிசுகளுக்கு கிரயம் செய்து கொடுத்தனர். மேற்படி கிருஷ்ணசாமி மற்றும் பழனிச்சாமி ஆகியோர் என் அப்பாவின் உடன்பிறந்த சகோதரர்கள்.

வா.சா.ஆ.5 ஆவணம் என் அப்பாவுக்கும், அவரது சகோதரர்களுக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் என் அப்பாவிற்கும், அவரது சகோதரர்களுக்கும் சொந்தமான கூட்டுக்குடும்ப சொத்துக்கள், ............

பூர்வீகச்சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டு, பி அட்டவணை சொத்துக்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது. பி அட்டவணையில் உள்ள கூட்டுக்குடும்ப சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தோம். பழனியப்ப கோனார் என் அப்பாவின் மூத்த சகோதரர். அவர்தான் கூட்டுக்குடும்ப சொத்துக்களை பராமரித்து, வரவு செலவுகளை பார்த்து வந்தார் என்றால் தவறு. என் பாட்டி அப்போது உயிருடன் இருந்து வந்தார். அவர்தான் வரவு செலவுகளை பார்த்து வந்தார். அவர் உயிருடன் இருந்தபோதே வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஏற்பட்டது. கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து வருமானம் வந்தது என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 19.06.2003 ல் வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஏற்பட்டது. அந்த பாகப்பிரிவினைக்கு முன்பு வா.சா.ஆ.4 கிரய ஆவணம் என் அப்பா பெயரில் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரய ஆவணம் என் அப்பாவின் தனிப்பட்ட வருமானத்திலிருந்து கிரயம் வாங்கப்பட்டது என்றும், அதனால்தான் வா.சா.ஆ.5 பாகப்பிரிவினையில் வா.சா.ஆ.4 கிரயச்சொத்துக்கள் உட்படுத்தப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 கிரய ஆவணத்தில் கண்டுள்ள ஏ அட்டவணை சொத்துக்கள் பொறுத்து, பாகப்பிரிவினை கோருவதற்கு எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

வழக்கு ஏ அட்டவணை சொத்தில் நான் குடியிருக்கும் வீட்டை எனது செலவில் கட்டினேன் என வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை. அப்போது வழக்கு தாக்கல் செய்தபோது நான் வீடு கட்டிக்கொண்டிருந்தேன். அந்த விவரத்தையும் நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை. அந்த வீட்டை என் அப்பாதான் கட்டினார் என்றும், .....

அதில் நான் அத்துமீறி குடியிருக்கிறேன் என்றும், அதனால்தான் எனது செலவில் நான் வீடுகட்டினேன் என்ற விவரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரையில் விவரிக்காத விவரங்களை எனது சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றும், எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2014 ம் வருடம் என் அண்ணன் கடன் வாங்கியதால், நான் 2 ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்றேன் என்று சொல்லிவிட்டு, அதற்கு முரணாக பத்து வருடங்களுக்கு முன்பு என் அண்ணன் எங்கே இருந்தார் என தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து என் அப்பாவிற்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் வரவில்லை என்றும், வா.சா.ஆ.4 கிரய ஆவணம் அவரது தனிப்பட்ட வருமானத்திலிருந்து கிரயம் பெறப்பட்டது என்றும், அதனால்தான் இதர பாகஸ்தர்கள் அது குறித்து கேள்வி கேட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2006 ம் வருடம் என் பெற்றோர்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். அப்போது அவர்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை. அந்த காலக்கட்டத்தில் என் அப்பாவின் வருமானத்தில்தான் என் அம்மா குடும்பம் நடத்தி வந்தார் என்றால் என் அம்மாவும் விவசாயம் செய்து வந்தார். என் அம்மா பெயரில் சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. 2006 ம் வருடத்தில் என் அம்மா 1 ¾ ஏக்கர் சொத்தை கிரயம் வாங்கியுள்ளார். என்னிடம் காட்டப்படுவது என் அம்மா சொத்தை கிரயம் வாங்கியதற்கான கிரய ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2. பி.வா.சா.ஆ.2 சொத்தை கிரயம் பெறுவதற்கு, என் அப்பாதான் மறுபயன் செலுத்தினார் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு தனிப்பட்ட முறையில்

வருமானம் எதுவும் கிடையாது என்றும், பி.வா.சா.ஆ.2 சொத்தை என் அப்பாதான் என் அம்மா பெயரில் கிரயம் வாங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மாவின் பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லை.

ஏ அட்டவணை சொத்தை பொறுத்து பாகம் கோருவதற்கு எனக்கு எந்தவித அடிப்படை முகாந்திரமும் கிடையாது என்றும், எனவே ஏ அட்டவணை சொத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தை பொறுத்து மட்டும் பாகம் செய்து கொள்வதற்கு பிரதிவாதிகளுக்கு ஆட்பேசனை கிடையாது என்றால் சரியல்ல.

ஏ அட்டவணை சொத்தின் அசல் ஆவணம் வினோத்குமார் என்பவரின் பெயரில் உள்ளது என நீதிப்பேராணை மனு விசாரணையில் நான் எதிர்வாதம் செய்தேன். ஏ அட்டவணை சொத்தின் அசல் ஆவணத்தை, நான்தான் என் அப்பாவை தாக்கி எடுத்துச்சென்று, வினோத்குமார் வசம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. பூர்வீகச்சொத்திலிருந்து வருமானம் எதுவும் வரவில்லை என்றும், அதனால்தான் அதற்குரிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா அவருடைய கடின உழைப்பின் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்து, தனித்த முறையில் ஏ அட்டவணை சொத்தை அவர் பெயரில் கிரயம் வாங்கியுள்ளார் என்றும், எனவே ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்